OS No.1/2014, நாள்: 11.11.2019

போச்சம்பள்ளி மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில் வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. சாட்சி திறந்த நீதிமன்றத்தில் அழைக்கப்பட்டு ஆஜர். நீதிமன்றத்தில் உதவியாளர் திருமதி.சரஸ்வதி அவரால் சாட்சியிடம் சத்தியபிரமாணம் செய்யப்பட்டது. உரிமையியல் விசாரணை சட்டம் பிரிவின் கீழ் விசாரணை செய்யப்பட்டார்.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : கீதா | வயது | : 46 |
| கணவர் பெயர் | : பிரகாசம் | வேலை | : விவசாயம் |
| கிராமம் | : மத்தூர் | நாட்டினம் | : இந்து |
| தாலுக்கா | : போச்சம்பள்ளி | சாதி | : -- |

<u>வா.சா.1 ___ கீதா ஆஜர், முதன்மை விசாரணை :-</u>

நான் இவ்வழக்கில் 1ம் வாதி. மேற்படி நான் எனக்காகவும், 2ம் வாதிக்காகவும் பிரமாண வாக்குமூலத்தை தாக்கல் செய்கிறேன். அதை என்னுடைய முதல் விசாரணையாக ஏற்கவேண்டுகிறேன். 4.3.1948ம் தேதி ஏற்பட்ட கிரயப்பத்திரத்தின் ஜெராக்ஸ் நகல் வா.சா.ஆ.1 ஆகும். 15.11.2014ம் தேதியிட்ட கணினி சிட்டா(பட்டா எண்.1263) வா.சா.ஆ.2 ஆகும். 15.11.2014ம் தேதியிட்ட கணினி சிட்டா(பட்டா எண்.1258) வா.சா.ஆ.3 ஆகும். வழக்கு சொத்துக்களின் வில்லங்க சான்றிதழ் வா.சா.ஆ.4 ஆகும். 13.02.2013ம் தேதியிட்ட 2ம் பிரதிவாதி பெயரிலுள்ள தானசெட்டில்மென்ட் பத்திரத்தின் சான்றிட்ட நகல் வா.சா.ஆ.5 ஆகும். தாவாப்படி தீர்ப்பாக வேண்டும்.

ஒம்./-ஏ. செல்வகுமார்,பி.இ.,பி.எல்.,
மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல்
நடுவர், போச்சம்பள்ளி.